

# கோலாலம்பூரில்

## புதிய மேம்பாட்டுத் திட்டங்கள்

# முடக்கம்

கோலாலம்பூர், ஆக. 29-

கோலாலம்பூர் தலைநகரில் அனைத்து புதிய மேம்பாட்டுத் திட்டங்களுக்கான அனுமதியையும் அரசாங்கம் முடக்கி வைத்துள்ளது. பணிப்படை ஒன்று அமைக்கப்படும் வரையில் இந்த முடக்கம் அமலில் இருக்கும் என கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டாக்டர் ஸலேஹா முஸ்தபா கூறினார்.

கம்போங் கெரிஞ்சி, ஜாலான் பந்தாய் பெர்மாயில் கால்வாய் ஒன்று சரிந்த சம்பவத்தை நேரில் பார்த்தபிறகு நேற்று மாலை அவர் இதனை நிருபர்களிடம் தெரிவித்தார்.

கோலாலம்பூர் இன்னும் பாதுகாப்பான இடம்தான் என்று தெரிவித்த அவர், பாதாள குழிகள் ஏற்பட்டுள்ள பகுதிகளில் சற்று எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என பொதுமக்களை வலியுறுத்தினார்.

பக்கம் 13

முதல் பக்கத் தொடர்ச்சி

## கோலாலம்பூரில் புதிய மேம்பாட்டு...




பாதாள குழிகள் ஏற்பட்டுள்ள பகுதிகள், குறிப்பாக ஜாலான் மஸ்ஜிட் இந்தியா அருகே நாம் கவனமாக இருக்க வேண்டும். அப்பகுதியை பொதுமக்கள் நெருங்காமல் இருக்க அதிகாரிகள் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர். ஆனால் கோலாலம்பூரின் மற்ற பகுதிகள் எல்லாம் பாதுகாப்பானவை என அவர் கூறினார்.

கடந்த திங்கட்கிழமை சரிந்து விழுந்த கம்போங் கெரிஞ்சி கால்வாய் பகுதி தற்போது கோலாலம்பூர் மாநகர் மன்ற அதிகாரிகளால் மூடப்பட்டுள்ளது. கோலாலம்பூரில் கடந்த வாரம் ஏற்பட்ட மூன்று பாதாள குழிகளில் இதுவும் ஒன்றாகும்.

கடந்த வெள்ளிக்கிழமை ஓர் இந்திய பிரஜையான 48 வயது விஜயலட்சுமி ஜாலான் மஸ்ஜிட் இந்தியாவில் திடீரென ஏற்பட்ட பாதாள குழியில் விழுந்து காணாமல் போயுள்ளார். இந்நிலையில் சம்பவ இடத்திலிருந்து 50 மீட்டர் தொலைவில் நேற்று மற்றொரு பாதாள குழு ஏற்பட்டது.

இதனிடையே, கோலாலம்பூரில் அதிக அபாயம் நிறைந்த பகுதிகளை அடையாளம் காணும் பொருட்டு கோலாலம்பூர் வரைபடத்தை தயார் செய்ய அமைச்சு திட்டமிட்டிருப்பதாக ஸலேஹா கூறினார். இது கூடிய விரைவில் தொடங்கப்படும். ஆனால் கூடுதல் அவகாசம் தேவைப்படுகிறது என்றார் அவர்.